செய்தி வெளியீடு எண்:656 நாள்: 05.10.2017

<u>செய்தி வெளியீடு</u>

## *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவமழை 2017 தொடர்பாக மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தான ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது:-*

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள் தலைமையில் கடந்த **26.09.2017** அன்று நடைபெற்ற வடகிழக்கு பருவமழை குறித்த முன்னேற்பாடு ஆய்வின் தொடர்ச்சியாக இன்று **(05.10.2017)** ஆய்வுக் கூட்டம் முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகம் எழிலகத்திலுள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் முதன்மை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., அரசுச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முனைவர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., மற்றும் ஆணையர் (பேரிடர் மேலாண்மை) திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்பட்டது.

கடந்த ஆய்வின் போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடத்துதல், பல்துறை அடங்கிய மண்டலக்குழுக்கள் அமைத்தல், தமிழகத்தில் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்துதல், முதல் நிலை மீட்பாளர்களை தயார் செய்தல், பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளிலுள்ள பாலங்கள் / சிறுபாலங்களிலுள்ள அடைப்புகளை நீக்குதல், நீர்நிலைகளை தூர்வாருதல், நீர்நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டன. அவற்றின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வடகிழக்கு பருவ மழைக்குத் தேவையான கிராம அளவிலான முன்னெற்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, பல்நோக்கு மற்றும் நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்தல், தமிழ் நாடு பேரிடர் மீட்பு படை தயார் நிலையில் வைத்தல், சமுதாய அடிப்படையிலான பேரிடர் திட்டம், பேரிடர் காலங்களில் பொது மக்கள் பாதிப்புக்கு உள்ளாகதவாறு எண்ணெய் நிறுவனங்கள், தொலைதொடர்பு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட அறிவுறைகள் மற்றும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், உணவு, குடிநீர், சுகாதாரம், சிறப்பு ஏற்பாடுகள் போன்ற நிவாரண மையங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், மீட்பு குழுவினரின் ஆயத்த நிலை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனைத்தும் போர்க் கால அடிப்படையில் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டது.

**1. <u>பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் (MPES)</u>:**

கடலோர பேரிடர் அபாயக் குறைப்புத்திட்டத்தின் கீழ் (Coastal Disaster Risk Reduction Project) தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பொதுப்பணித்துறையினரால் ரூ. 345.60 கோடி செலவில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றுள் 115 மையங்கள் கட்டுமானம் நிறைவடைந்து பயன்பாட்டுக்குத் தயார் நிலையில் உள்ளன.

மேற்கண்ட பல்நோக்கு மையங்களில் அந்தந்த இடங்களின் மக்கள் தொகை மற்றும் இடவசதிக்கேற்ப 500 பேர் முதல் 2000 பேர் வரை தங்கும் வண்ணம் இம்மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மாவட்ட வாரியாக பல்நோக்கு மையங்கள் குறித்த விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மாவட்டம் | பல்நோக்கு பாதுகாப்பு மையங்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடிகளில்) |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 5 | 18.315 |
| 2 | காஞ்சிபுரம் | 5 (1 நிலுவை) | 11.7856 |
| 3. | விழுப்புரம் | 12 (1 நிலுவை) | 29.8 |
| 4. | கடலூர் | 14 | 47.1991 |
| 5. | நாகப்பட்டினம் | 9 (1 நிலுவை) | 32.9429 |
| 6. | திருவாரூர் | 6 | 29.67 |
| 7. | தஞ்சாவூர் | 14 | 32.646 |
| 8. | புதுக்கோட்டை | 10 | 27.0415 |
| 9. | இராமநாதபுரம் | 23 (2 நிலுவை) | 62.7967 |
| 10. | தூத்துக்குடி | 5 | 13.035 |
| 11. | திருநெல்வேலி | 6 | 20.05 |
| 12. | கன்னியாக்குமரி | 12 | 20.3182 |
| | **மொத்தம்** | **121**<br>**(6 பணிகள் நிலுவை)** | **345.60** |

இந்த பல்நோக்கு மையங்களில் மக்கள் தங்கும் அறைகள், மருத்துவப் பரிசோதனை அறைகள் என தனித்தனியே அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சமூக நலக்கூடங்களாக செயல்படும் பல்நோக்கு மையங்களில் சமையலறைகள் கூடுதலாகக் கட்டப்பட்டுள்ளன.

**2. பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள பாதுகாப்பு மையங்கள்:**

பேரிடர் காலங்களில் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி உரிய பாதுகாப்புடன் தங்க வைத்திட பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் இனம் வாரியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வகைப்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| மிகஅதிகம் | 318 |
| அதிகம் | 544 |
| மிதமானது | 821 |
| குறைவு | 1489 |
| மொத்தம் | 3172 |

**3. தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை உருவாக்குதல், பயிற்சியளித்தல் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 110 விதியின் கீழ் மாநில பேரிடர் நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, தற்போது ஆவடியில் இயங்கி வரும் TSP XIII Battalion என்னும் படையை முழு அற்பணிப்புடன் கூடிய 1000 உறுப்பினர்கள் அடங்கிய தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை (TNDRF) ஒன்று உருவாக்கிட அரசாணை விரைவில் வெளியிடப்படும். அந்த படைக்கு ரூ.14.59 கோடி செலவில் உபகரணங்கள் வழங்குதலும், ரூ.0.41 கோடி செலவில் திறன் மேம்பாடு செய்தலும் அடங்கும்.

**4. கடல் அரிப்பு, மின்னல், இடி மற்றும் சூறாவளி போன்ற பேரிடர்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இழப்பீடு வழங்குதல்:**

வரலாற்று சிறப்பு மிக்க அரசாணை எண். 246, வருவாய்த் துறை, நாள்: 03.08.2017–ன் மூலம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கடல் அரிப்பு, மின்னல், இடி மற்றும் சூறாவளி_போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இழப்பீடுகள் இனம் வாரியான கீழ்கண்டவாறு வழங்கப்படும்:

| வ. எண். | நிவாரண உதவி | அதிகரிக்கப்பட்ட நிவாரண தொகை |
|---|---|---|
| அ | மனித உயிரிழப்பிற்கு | ரூ.4,00,000/– |

| | | |
|---|---|---|
| ஆ | உடல் உறுப்பு இழப்பிற்கான நிவாரணம் (கண் அல்லது கால்) | ரூ.59,100/– (40% முதல் 60% உடல் வரை ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு) |
| | | ரூ.2,00,000/– (60%-க்கு மேல் உடல் ஊனம் ஏற்பட்ட நபர்களுக்கு) |
| இ | படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நபர்களுக்கான நிவாரணம் | ரூ.12,700/– (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சை பெறுபவர்களுக்கு) |
| | | ரூ.4,300/– (மருத்துவமனையில் ஒரு வாரத்திற்குள் சிகிச்சை பெறுபவர்களுக்கு) |
| ஈ | முழுமையாக சேதமடைந்த குடிசைகளில் சேதமடைந்த ஆடைகள், பாத்திரங்கள் / வீட்டு உபயோகப் பொருட்களுக்கான நிவாரணம் | துணிகளை இழந்தமைக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.1800/–<br><br>பாத்திரங்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் இழந்தமைக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.2000/–. |
| உ | பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கான நிவாரணம் | பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.4,100/-<br><br>முழுமையாக சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ. 5,000/–<br>(இதனுடன் சேர்த்து 10 கிலோ அரிசி, 1 வேட்டி, 1 சேலை மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் விலையில்லாமல் வழங்கப்படும்) |
| | **வேளாண் துறை** | |
| அ) | கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை தூர்வாருதல் | ரூ.12,200/– ஹெக்டேர் ஒன்றுக்கு |
| ஆ) | கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட மீன் பண்ணைகள் சீரமைப்பு / புணரமைப்பு | ரூ.12,200/– ஹெக்டேர் ஒன்றுக்கு |
| ஆ(ii) | பாதிப்புக்குள்ளான வேளாண், தோட்டக்கலை மற்றும் நீண்ட காலப் பயிர் இனங்களுக்கு இடு | பாசன வசதி அற்ற நிலங்களில் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 7410/– |

| | | |
|---|---|---|
| | பொருள் மானியத் தொகை | பாசன வசதி பெற்ற நிலங்களில் பயிரிடப்பட்டு பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/– (நெற் பயிர்கள் உட்பட) நிபந்தனைக்குட்பட்டு குறைந்தபட்ச நிவாரணத் தொகை ரூ.1000/–க்கு குறைவில்லாமல் வழங்கப்படும்.<br><br>நீண்ட கால பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000 /–<br><br>பட்டுபூச்சி வளர்ப்பிற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 7410/– |

5. <u>சமுதாய பங்களிப்பு:</u>

பேரிடர் காலங்களில் கிராம அளவில் நீச்சல் மற்றும் மரம் ஏறுதல் போன்ற திறன் மிக்க தன்னார்வ தொண்டர்கள் முதல் நிலை மீட்பாளர்களாக (First Responder) செயல்பட்டு தேடுதல், காப்பாற்றுதல் மற்றும் ஆபத்து பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றுதல் போன்ற பணிகளை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேடுதல் மற்றும் மீட்பு, முதல் உதவி, தங்குமிடம் மற்றும் நிவாரணம் வழங்குதல் போன்ற பணிகளுக்கு தனித்தனியே குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

4,399 அபாயப் பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் முதல் நிலை மீட்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மொத்தம் 23,325 முதல் நிலை மீட்பாளர்கள் அக்குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். அவற்றில் 6,740 பெண் உறுப்பினர்கள் அடங்குவர்.

இக்குழுக்களில் முதன்முறையாக பெண்கள் மற்றும் பாம்பு பிடிப்பவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

| **பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளின் வகைப்பாடு** | **முதல்நிலை மீட்பாளர்களின் எண்ணிக்கை** | **பெண் முதல்நிலை மீட்பாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| மிகஅதிகம் | 2679 | 861 |
| அதிகம் | 4131 | 1275 |
| மிதமானது | 8444 | 2766 |
| குறைவு | 8071 | 1838 |
| **மொத்தம்** | **23,325** | **6740** |

<u>**திறன் மேம்பாடு**</u>

திறன் மேம்பாட்டிற்கான ஒத்திசைவு பயிற்சியானது முதல் நிலை பொறுப்பு மற்றும் பிற குழுவினர்களுக்கு காவல் துறை, தீயணைப்பு துறை, போக்குவரத்து கழகத்தை சார்ந்த ஓட்டுநர்கள் / நடத்துனர்கள் மற்றும் முக்கிய பிற துறைகளின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகிறது.

**<u>ஆப்த மித்ரா–சமூக ஆர்வலர்களுக்கான பயிற்சி திட்டம்</u>**

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால், இந்தியாவில், வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளை தேர்ந்தெடுத்து, அப்பகுதியிலுள்ள சமூக தன்னார்வலர்களுக்கு பேரிடர் மீட்புப் பயிற்சியானது ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. அதன்படி, கடந்த கால வெள்ள பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, சென்னை மாவட்டம் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

1. இத்திட்டத்தினை செயல்படுத்திட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமானது, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
2. பயிற்சி வழங்கிட ஏதுவாக சென்னை நகரத்தினை சேர்ந்த 200 சமூக ஆர்வலர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.
3. அவர்களுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக தமிழ் நாடு தீயணைப்பு பயிற்சி நிலையம், தாம்பரம், தேர்வு செய்யப்பட்டுள்ளது.
4. இத்திட்டத்தின்படி, ரூபாய் 22.70 லட்சம் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் (CBDRM) (ரூ.15 கோடி)</u>**

பேரிடர் அபாயத்திற்குள்ளாகும் சமூகத்தினர் தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் பேரிடர் அபாய குறைப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகளை சிறப்பாக பயன்படுத்தி கொள்வதற்கு தயார்படுத்தும் விதமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தினால் (SIRD) ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

பேரிடர் அபாயம் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் குறித்து மதிப்பீடு செய்தல், சமூகத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் திறன் மேம்பாடு செய்தல், முன்னெச்சரிக்கை கருவிகள் மற்றும் பாதுகாப்பு மைய கட்டிடங்கள் பயன்பாட்டினை சமூகத்துடன் இணைத்தல், அவசர காலத்தினை எதிர்கொள்வதற்கான திறன்களை வலிமைபடுத்துதல் போன்றவை அடங்கும்.

**சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தின் குறிக்கோள்கள்:-**

சமுதாய அடிப்படை பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் புத்தாக்கப் பயிற்சி, பேரிடர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, பேரிடர் குறித்த விழிப்புணர்வு, நீச்சல்பயிற்சி, முதலுதவி, கிராம அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டம், சமுதாய பாதுகாப்பு மைய மேலாண்மை, தெரு கூத்து மற்ற பயிற்சிகள் (Mockdrills), 4413 குழுக்கள் **2,77,530** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்பாடுகளுக்கு **31.08.2017** வரையிலான மொத்த செலவினம் ரூ.**7.46** கோடி.

**6) பேரிடர் காலங்களில், பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகாதவாறு, பல்வேறு நிறுவனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

**எண்ணெய் நிறுவனங்கள்—**

அனைத்து எண்ணெய் நிறுவனங்களும் தேவையான அளவில் எரிபொருள் இருப்பு வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கடந்த பேரிடர் காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் காவல்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் உதவியுடன் குறைகளை களைந்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**தொலைத் தொடர்பு நிறுவனங்கள்—**

தொலைத் தொடர்புகளில் பாதிப்புகள் ஏதும் ஏற்படாதவாறும், அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் இணைப்புகளை உடனுக்குடன் சீர் செய்திடும் வகையில், போதுமான எண்ணிக்கையில் சேவை பணியாளர்களை வைத்துக்கொள்ளவும், தொலைத் தொடர்புகள் எவ்வித இடர்பாடுகள் இன்றி செயல்படுவதை உறுதிசெய்துகொள்ளவேண்டும் எனவும் அனைத்து தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

**கல்வி நிறுவனங்கள்—**

கல்வி நிறுவனங்களிலுள்ள மின்சார இணைப்புகள், கழிவு நீர் கால்வாய்களில் விழும் நிலையில் உள்ள மரக்கிளைகள், கழிவுநீர் தேங்காமல் உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மோசமான கட்டிட பகுதிகளைத் தவிர்த்திடவும், பாதுகாப்புக் குறித்து செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை எவை என்பதை அனைத்து மாணாக்கர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மருத்துவமனைகள்**

அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் தீவிர சிகிச்சை / இதர சிகிச்சை பிரிவுகளில் போதுமான மின்சார சேமிப்பு ஏற்பாடுகள் செய்தல், ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், அவசர மருந்துகள், உயிர்காக்கும் உபகரணங்கள் போன்றவை போதுமான அளவில் பயன்படுத்தும் நிலையில் வைத்திடவும், ஜெனரேட்டர்களை தரைதளத்தில் இருந்து உயர்ந்த பகுதி அல்லது முதல் தளத்தில் அமைத்திடவும், அவற்றை இயக்கும் விதத்தில் போதுமான அளவில் எரிபொருள் கையிருப்பில் உள்ளதை உறுதி செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**7. நிவாரண மையங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள்**

**பொது:**

நிவாரண மையங்களாக செயல்படும் கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டு, போதுமான மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நிவாரணப் பணிகளுக்காகவும், நிவாரண முகாம்களிலும் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**குடிதண்ணீர் மற்றும் துப்புரவு**

பாதுகாப்பான போதுமான அளவில் குடிநீர் வசதி, கழிவறைகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உணவு**

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு சமைத்த அல்லது உலர்ந்த உணவு வகைகள், ஆடைகள், போர்வை போன்றவை வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சுகாதாரம்**

உயிர்காக்கும் மருந்துகள், மருத்துவர்களின் பார்வை நேரம், அவர்களின் தொலைபேசி எண்கள் அடங்கிய விபரங்கள், மருத்துவ ஊர்திகளின் விவரங்கள் தொடர்புடைய துறையினரால் தயார் செய்யப்பட்டு வருகிறது.

**பெண்கள், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிக்களுக்கான சிறப்பு ஏற்பாடுகள்**

பேரிடர் காலங்களில் மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள், முதியோர், குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு போதுமான சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**கால்நடைகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள்**

கால் நடைகளுக்கான மருந்துகள், தீவனங்கள் மற்றும் தண்ணீர் போதுமான அளவில் கால்நடைகளுக்கான முகாம்களில் இருப்பு வைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7. கூடுதல் VHF கருவிகள் கொள்முதல் செய்தல்:**

கடலோர மற்றும் உள் மாவட்டங்களில் உள்ள வருவாய்த் துறை அலுவலகங்களில் பேரிடர் தொடர்பான செய்திகளை உடனுக்குடன் வழங்கிட கூடுதல் VHF கருவிகள் ரூ.**81.98** இலட்சம் செலவில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிறுவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**8. மீட்புக் குழுவினர் மற்றும் உபகரணங்களை ஆயத்த நிலையில் வைத்திருத்தல்**

மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, மீன்வளத்துறை மற்றும் இதர துறைகளுடன் கலந்தாலோசித்து, மீட்புக்குழுக்கள், படகுகள், ஆயுதப்படைக் காவலர்கள், சுற்றுக்காவல் ஊர்தி ஆகியவற்றை ஆயத்த நிலையில் வைத்திருக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், எரிவாயு மற்றும் இதர இன்றியமையா பொருட்கள் விரைவில் சென்றடைவதற்கு ஏதுவாக போக்குவரத்து தடையின்றி செல்ல திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பேரிடர் பகுதிகளில் சமூக விரோத செயல்பாடுகளை தடுத்திடும் வண்ணம் காவல் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**